1995 ஏப்ரல் 10]

287—

பூம்புகார் தொகுதியில் அணுமின் நிலையம் அமைத்தல்

15772*—திரு. எம். பூராசாமி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதியில், பிள்ளைபெருமாள் நல்லூரில் அணுமின் நிலையம் அமைக்க மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பிள்ளைபெருமாள் நல்லூரில் அணுமின் நிலையம் அமைக்க மத்திய அரசை வற்புறுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-20

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிள்ளைபெருமாள் நல்லூரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் உள்ளன. மத்திய அரசை வற்புறுத்தி அனல் மின்நிலையம் அமைத்தால் தமிழக அரசுக்கு, புரட்சித் தலைவியினுடைய அரசுக்கு மிக்க பயன் உண்டு. பொதுமக்களுக்கான நல்ல திட்டமாகும். ஆகவே, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ள அந்த இடத்திலே அதை அமைக்க தமிழக அரசு மத்திய அரசிடம் வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கேள்வியிலே அணு மின் நிலையம் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். நான் ஏற்கெனவே அணு மின் நிலையம் அமைக்கின்ற உத்தேசம் ஏதும் இல்லை என்று தெரிவித்திருக்கிறேன். ஆனால், நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியம் ஏற்கெனவே ஒரு தனியாருடன் 1994-ஆம் ஆண்டு--19-9-1994-ல் Dyana Megavasky Power Company என்கிற நிறுவனத்துடன் 300 மெகாவாட் திறன் கொண்ட ஒருங்கிணைந்த எரிவாயு சுழலி மின் திட்டத்தை, அதாவது கியாஸ் டர்பைன் ப்ராஜெக்ட் என்கிற திட்டத்தை பிள்ளைபெருமாள் நல்லூரில் நிறுவுவதற்காக ஏற்கெனவே ஒப்பந்தம் செய்துள்ளது. மின்சார கொள்வகை ஒப்பந்தம் அதாவது பவர்

பர்சேஸ் அக்ரிமென்ட் 22-10-1994 அன்று அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 300 மெகாவாட் கொண்ட ஒருங்கிணைந்த எரிவாயு சுழலி மின் திட்டம் பிள்ளைபெருமாள் நல்லூரில் நிறுவுவதற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் நடைமுறைகளை தனியார் துறை மூலமாக மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எரிவாயு திட்டத்தை நடப்பாண்டிலாவது நமது புரட்சித் தலைவியின் அரசு நடைமுறைப்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதுசம்பந்தமாக ஒப்பந்தம், மெமோரேண்டம் ஆப் அண்டர்ஸ்டான்டிங் போடப்பட்டு, அதற்குப் பின்னாலே பி.பி.ஏ. அரசின் பரிசீலனைக்கு வந்திருக்கிறது. மைய அரசினுடைய சென்ட்ரல் எலக்ட்ரிக் அதாரிட்டி ஆப் இந்தியாவினுடைய ஒப்புதல் பெற வேண்டும். அதற்குப் பின்னாலே financial processes இருக்கிறது. அதற்குப் பின்னாலே மெஷினரி எல்லாம் வரவழைக்க வேண்டும். தனியார் நிலத்தைக் கையகப்படுத்திக் கொடுக்கின்ற பிரச்சினையும் இருக்கிறது. ஆகவே, திட்டத்திற்கு ஒப்புதலை மின்சார வாரியம் வழங்கியிருக்கிறது. மெமோரேண்டம் ஆப் அண்டர்ஸ்டான்டிங் கையெழுத்திட்டிருக்கிறோம். பி.பி.ஏ. சம்பந்தமாக அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, அதுசம்பந்தமான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த ஆண்டு வருமா என்பது பிரச்சினை அல்ல. அதற்கான வேலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டத்தை முடிப்பதற்கு என்று சில காலக்கெடு இருக்கிறது. பொதுவாக, மின் திட்டங்களை ஒரே ஆண்டுக் காலத்திற்குள்ளே முடிக்க முடியாது. சில நேரங்களிலே 3 ஆண்டுக்காலமாகும். சில நேரங்களிலே நம்முடைய நிலக்கரி மூலம் உற்பத்தி செய்கிற தெர்மல் பவர் ஸ்டேசனுக்கு 3 ஆண்டுக்காலம், 4 ஆண்டுக்காலம்கூட ஆகக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே. ஓராண்டுக் காலத்திற்குள்ளே முடிப்பதற்கு வாய்ப்பு இல்லை. இப்பொழுது அதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மிக வேகமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *288*, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை.

வினா எண் *289*, திரு, கே. செல்வராஜ், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

289—

கோயம்புத்தூர் குடிசைப் பகுதிகளில் வீட்டுவசதி வாரிய வீடுகள் கட்டுதல்

***39973**—திரு. கே. செல்வராஜ்.:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், உக்கடம், செம்பட்டி காலனி குடிசைப் பகுதி ஆகிய இடங்களில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே இவ்வினா எழவில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, உக்கடம், செம்பட்டி காலனி பகுதியில் சுமார் *40* ஆண்டுக்காலமாக குடிசைகளில் நில வாடகைக்கு இருந்து வருகிறார்கள். அந்தக் குடிசைகளுக்குப் பதிலாக குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதாகக்கூட அந்த வாரியத்தினுடைய தலைவரே வந்து பார்வையிட்டு வேலைகள் ஆரம்பிப்பதாக உறுதி கூறியுள்ளார்கள். அந்தப் பகுதியிலுள்ள *1200* குடிசைகள் *40* ஆண்டுக்காலமாக, சுதந்திரம் பெற்றதிலிருந்து இதுவரை அவர்களுக்கு யாருமே வீடுகள் கட்டிக் கொடுக்காத சூழ்நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மீண்டும் பரிசீலனை செய்து வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.